தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 2-3-2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் பல்கலையில் தேசிய அறிவியல் தின விழா**

தேசிய அறிவியல் நாள் 2019 விழா தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் பிப்ரவரி 28ம் நாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

முனைவர் தி. ரகுசந்தர், முதல்வர், மாணவர் நல இயக்குநரகம், அவர்கள் அறிவியல் கண்காட்சியை திறந்து வைத்தார். முனைவர். எஸ். மோகன்குமார், இயக்குநர், தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்ப மையம் அவர்கள் அறிமுக உரையாற்றினார்.

பேராசிரியர். எம்..ஆர்.என். மூர்த்தி, முதுநிலை விஞ்ஞானி, இந்திய அறிவியல் கழகம் பெங்களுரு அவர்கள் “மக்களுக்காக அறிவியல் மற்றும் அறிவியலுக்காக மக்கள்” என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். அவர் ஆற்றிய உரையில் மனிதனின் அன்றாட சமூக வாழ்வில் அறிவியலின் முக்கியத்துவம் மற்றும் அதன் முறையான பயன்பாட்டினை சிறப்பாக விளக்கினார். மேலும் நாட்டின் பாதுகாப்பு துறையில் அறிவியலின் பங்கை எடுத்துரைத்தார். சிறப்புரையில் 350 மாணவர்க்ள பங்கேற்றனர்,

மேலும் அறிவியல் கண்காட்சியில் 75 மாணவர்கள் பங்கேற்று அறிவியல் மாதிரிகளை காட்சிக்கு வைத்து பரிசுகளை பெற்றனர். முன்னதாக, முனைவர். து. உமா, பேராசிரியர் மற்றும் தலைவர், உயிர் வேதியியல் துறை அவர்கள் வரவேற்புரையாற்றினார். முனைவர். ஆர். ஞானம், பேராசிரியர் மற்றும் தலைவர், தாவர உயிர் தொழில்நுட்ப துறை, அவர்கள் நன்றியுரையாற்றினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்